தாம்பரம் மாநகர கழக செயல் வீரர்கள் கூட்டம் கிழக்கு தாம்பரம் அன்னை பாத்திமா சமூக நலக்கூடத்தில் அமைச்சரும் மாவட்டச் செயலாளருமான தா.மோ அன்பரசன் தலைமையிலும் தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ வர்வேற்பிலும் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கலந்து கொண்டு கூட்டத்தில் நன்றி தெரிவித்து ஆலோசனை வழங்கினார். உடன் தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் மீ.அ.வைதியலிங்கம். மாவட்ட துணை செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் என்.மருது கணேஷ், பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் க.அன்புச்செல்வன், புனித தோமையார் மலை வடக்கு ஒன்றிய செயலாளர் ஜி.கே. விவேகானந்தன், மாநகர கழக நிர்வாகிகள் மேயர் க.வசந்தகுமாரி, வ.விஜயரங்கன், பி.சதாசிவம், பகுதி கழக செயலாளர்கள் மண்டல குழுத்தலைவர்கள் வே.கருணாநிதி, எஸ்.இந்திரன், டி.காமராஜ், எஸ்.சேகர், இ.ஜோசப்அண்ணாதுரை, ஏ.கே.கருணாகரன், மாடம்பாக்கம் ஆ.நடராஜன் மற்றும் தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழகப் பிரதிநிதிகள் வட்ட செயலாளர்கள். நிர்வாகிகள் ஊராட்சி மன்ற தலைவர்கள் வட்டக் கழக செயலாளர் மாமன்ற உறுப்பினர்கள். மாநகர அணிகளின் அமைப்பாளர்கள். துணை அமைப்பாளர்கள். இளைஞர் அணி. மாணவர் அணி. மகளிரணி மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் . கலந்து கொண்டனர். வெற்றிக்கு உழைத்த கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவருக்கும் 2000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்புரை!

தஞ்சை வடக்கு மாவட்டக் கூட்டம் - வாக்காளர்களுக்கு நன்றி அறிவிப்புக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிவிப்பு!

தஞ்சை, ஜூன் 17-

தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

வருகின்ற 19.06.2024 புதன் கிழமை மாலை 05. 00 மணியளவில் பாபநாசம் மெயின் ரோட்டில் உள்ள பாபநாசம் பேரூர் கழக அலுவலகத்தில் தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் க.நசீர்முகமது தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் கலந்துக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

அதனை தொடர்ந்து மாலை 06.00 மணியளவில் பாபநாசம் கீழவீதியில் மயிலாடுறை நாடாளுமன்ற தொகுதி, பாபநாசம் சட்டமன்ற தொகுதியில் தி.மு.க தலைமையிலான இந்தியா கூட்டணிக்கு வாக்களித்த வாக்காள பெருமக்களுக்கு நன்றி அறிவிப்பு பொதுக் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சிறப்புரையாற்று கின்றனர்.

மயிலாடுதுறை நாடாளுமன்ற தொகுதி உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆர்.சுதா வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து உரையாற்றுகிறார்.

இதில் பாபநாசம் தொகுதி பார்வையாளரும், தாட்கோ தலைவருமான உ.மதிவாணன், பாபநாசம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் எம்.ஹெச்.ஜவாஹிருல்லா உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் கலந்துக்கொள்ள உள்ளனர்.

அதுசமயம், இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் , ஊராட்சி, வார்டு மற்றும் கிளை செயலாளர்கள், நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பிளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளைக் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் தவறாது கலந்துக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

என்.எம்.கதிரேசன் தலைமை ! ஜே.ஜே.எபினேசர் முன்னிலை !

39வது வட்ட திமுக சார்பில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா நல உதவிகள் !

டாக்டர் நா.எழிலன் எம்.எல்.ஏ, சிறப்புரை ! ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, கலாநிதி வீராசாமி எம்.பி, பங்கேற்பு !

சென்னை, ஜூன் 17 -

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 39வது வட்ட திமுக சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் வட சென்னை நாடாளுமன்ற தேர்தலில் வாக்களித்த வாக்காளப்பெருமக்களுக்கு நன்றி தெரிவித்து மற்றும் நவத்திட்டம் உதவிகள் வழங்குதல் நிகழ்ச்சி இன்று (17.06.2024 திங்கட்கிழமை) மாலை 6.00 மணியளவில் ஏ.இ.கோயில் தெரு, கிராஸ்ரோட்டில் நடைபெறுகிறது.

39வது வட்ட செயலாளர் என்.எம்.கதிரேசன் தலைமை வகிக்கிறார். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, பகுதி செயலாளர்ள் இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், மாவட்ட தலைவர் ஆர்.வெற்றிவீரன், மண்டலக்குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன் எம்.சி, தேவி கதிரேசன் எம்.சி, ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

என்.அனிபா, ஆர்.டி,ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி.சதிஷ்குமார், பி.அன்பழகன், எல்.செல்வமணி, ஜெ.கௌஸ் பாஷா, எஸ்.இரசம்மாள், எ.இப்ராஹிம், எம்.அப்துல்லா, ஜெ.ஜெபஸ்டி ன் பாபு, டி.கணேசன், ஆர்.கே.நகர் ஆர்.மூர்த்தி, ப.ஜெயபால், கே.சதிஷ்குமார், ஜி.மணிகண்டன், எஸ்.கவியரசு, கெ.எஸ்.குருநாதன், ஜி.சங்கரன், எ.சலாவுதீன், ஆகியோர் வரவேற்கின்றனர்.

கழக மருத்துவ அணி செயலாளர் டாக்டர் நா.எழிலன் சிறப்புரையா ற்றுகிறார்.மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பிக்கிறார்கள்.

இரா.மதிவாணன், பி.டி.பாண்டிச்செல்வம், ந.மனோகரன், இரா.நரேந்திரன், எஸ்.ஆர்.கமலக்கண்ணன், நாகம்மை கருப்பையா, வண்ணை மோகன், என்.மருதுகணேஷ், இர.பொன் இளவரசன், வெ.சு.சத்திய நாராயணன், சி.மணிக ண்டன், ஏ.டி.மணி, எஸ்.எம்.பரசுராமன், பி.சதிஷ்குமார், ப.ஆ.சண்முகம், எஸ்.கே.இளங்கோ, தா.வ.மு.கஜேந்திரன், நா.கோதண்டன், மா.நாகராஜன், ப.குமார், ச.தமிழ்செல்வன், பொ.து.ராஜா, வீ.வடிவேலு, குமாரி நாகராஜ் எம்.சி, பவித்ரா நரேஷ்குமார் எம்.சி, எம்.எம்.சாமி, வி.முத்து, ஆர்.ரமேஷ், பி.கே.மூர்த்தி, கே.மோகன், ஜெ.சுரேஷ்பாபு, டி.ஆர்.தணிகாசலம், எஸ்.தருப்பதி சாமி, மா.ரூபசங்கர், எஸ்.பி.எஸ்.புத்தன், எஸ்.எம்.டி.ரவிச்சந்திரன், வானூர் ராஜி, ஜெ.பிரேம்ஆனந்த், எ. வெங்கடேசன், ஜி.ராஜேஸ்வரி, பாம்பேலட்சுமி, ஜே.ஜே.நெல்சன், டி.லெனின், பா.கோதண்டன், வி.அன்பரசு, ம.நல்லதம்பி, எஸ்.சேகர், வி.வி.ரமேஷ், ஆ.விந்தன், எஸ்.மதியழகன், இ.கார்த்திக், பரமளா, சி.வேலாயுதம், ஜெ.ஆர்.செல்வகுமார், கா.ப.சாமி, எல்.காஞ்சனா, கே.குமார், ஜெ.ஸ்டாலின், இ.பிரே ம் குமார், க. கோபால், ஆர்.ராஜேஷ்குமார், ஜி.மைக்கேல், எம்.ஆனந்தன், சி.மணிகண்டன், ஆவின்சதிஷ், மாசிலாமணி, மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

டி.எல்பி என்.இரவி, எஸ்.துரை, இ.பிரகாசம், ஜெ.ஜெகன், ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

குடந்தை திருபுவனம்

'லிங்கன் சில்க்ஸ்' பத்மாவதி அம்மையார் மறைவு!

சாக்கோட்டை அன்பழகன் எம்.எல்.ஏ. - செ.இராமலிங்கம் அஞ்சலி!

குடந்தை, ஜூன் 17-

திருபுவனம் ஸ்ரீபாண்டு ரெங்கன் பஜனை மடம் ஸ்தாபகர் ஸ்ரீமான் உயர்திரு ஜி.சொக்கலிங்கம் பிள்ளை அவர்களின் மனைவியும், திருபுவனம் லிங்கம் சில்க் உரிமையாளர் சி.ஜானகி ராமன் அவர்களின் அன்புத் தாயாருமான சி.பத்மாவதி அம்மாள் நேற்று முன்தினம் இயற்கை எய்தினார்.

அன்னாரது இறுதி ஊர்வலம் நேற்று (16.06.2024) மாலை 3.00 மணி அளவில் அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு இறுதிச்சடங்குகள் நடைபெற்றது.

இச்செய்தியறிந்ததும், சாக்கோட்டை அன்பழகன் எம்.எல்.ஏ., முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், நகரச் செயலாளர் ஆச்சி, பிரபல நாதஸ்வர வித்வான் செம்பனார் கோவில் சகோதரர்கள் எஸ்.ஆர்.ஜி. ராஜன்னா, வலங்கைமான் எஸ்.ஏ.எஸ். சந்திரசேகர், சுவாமிமலை மணிமாறன், திருவிசை நல்லூர் டி.பி.ஜே. செல்வரத்தினம் ஆகியோர் அன்னாரது இல்லம் சென்று மறைந்த சொ.பத்மாவதி அம்மையார் உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

குவைத் தீ விபத்தில் உயிரிழந்த

முட்டம் சின்ன துரை குடும்பத்திற்கு ரூ.5 லட்சம் நிதி!

குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வழங்கினார்!

கடலூர், ஜூன் 17 -

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் குவைத் தீ விபத்தில் உயிரிழந்த சின்னதுரை குடும்பத்தினருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கான காசோலையை

வழங்கினார்

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டம், முட்டம் கிராமம் மேலத்தெருவை சேர்ந்த சின்னதுரை த/பெ.கிருஷ்ணமூர்த்தி (வயது 42) என்பவர் குவைத் நாட்டில் கடந்த 12.06.2024 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் மரணம் அடைந்தார்.

ஒன்றிய, மாநில அரசுகளின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முயற்சியினால் குவைத் நாட்டிலிருந்து சின்னதுரையின் உடல் வரவழைக்கப்பட்டு கடந்த 15-06- 2024 அதிகாலை 1.00 மணியளவில் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டு, நல்லடக்கம் செய்யப்பட்டது.

மேற்படி சின்னதுரை குடும்பத்தினருக்கு தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களால் ரூ 5,00,000 (ஐந்து லட்சம்) நிவாரண தொகை உடனடியாக வழங்க உத்தரவிடப்பட்டது.

அதனடிப்படையில் நேற்று (16- 06- 2024) அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் அ.அருண் தம்புராஜ் முன்னிலையில் சின்னதுரை மனைவி திருமதி சத்யாவுக்கு ரூபாய் 2,50,000 (இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம்) மற்றும் தாய் திருமதி சரோஜாவுக்கு ரூபாய் 2,50,000 (இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம்) என ரூபாய் 5,00,000க்கான காசோலையை வழங்கி ஆறுதல் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சார் ஆட்சியர் சிதம்பரம் செல்வி ரஷ்மிராணி, மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

மோடி தலைமையிலான அரசு இன்னும் 5 மாதத்தில் கவிழ்ந்து விடும்!

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் எதிர்க்கட்சியினர் டெபாசிட் இழப்பார்கள்!

ஈரோட்டில் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் பேட்டி!

ஈரோடு, ஜூன் 17 -

ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது:

சென்னையில் கடந்த 11 ந் தேதி காமராஜர் இல்லத்தில் காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எல்லோரும் காங்கிரஸ் கட்சியை வளர்க்க வேண்டும் என்றும், நடைபயணம் செல்ல வேண்டும், அதிக அளவில் பூத் கமிட்டி அமைக்கப்பட வேண்டும், இளைஞர்களை அதிக அளவில் காங்கிரஸ் கட்சியில் சேர்க்க வேண்டும் என அவர் தெரிவித்த கருத்து முரணாக எடுத்துக் கொள்ளப்பட்டது. அதுகுறித்து செல்வபெருந்தகை விளக்க மளித்து விட்டார்.

உள்ளாட்சி தேர்தலில் கூட்டணி வைக்க வேண்டாம் என முன்னாள் எம்.பி. ஒருவர் கருத்து சொன்னார். அதற்கு எதிர்ப்பு கிளம்பியது. உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட போது கூட்டணி வைத்தால் தான் வெற்றி பெற வாய்ப்பு கிடைக்கும்.

காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பல இடத்தில் மேயர் மற்றும் கவுன்சிலராக இருப்பதற்கு கூட்டணி தான் காரணம். கூட்டணி இருந்தால் தான் மக்களை சந்திக்கவும் வெற்றி பெறவும் வாய்ப்பாக அமையும். கூட்டணிக்குள் சில கருத்து வேறுபாடுகள், பிரச்சினைகள் இருப்பது சகஜம்.வரும் உள்ளாட்சி தேர்தலில் தி.மு.க.வுடன் கூட்டணி வைத்து தான் காங்கிரஸ் போட்டியிடும். அதில் எந்த மாற்றமும் இல்லை.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எதைப்பற்றியும் கவலைப்படாமல் மக்கள் பணியில் பணியாற்றி வருகிறார். அவர் ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் தலைவராக விளங்குகிறார். எனவே அவரது கரங்களையும் ராகுல் காந்தியின் கரங்களையும் வலுப்படுத்த வேண்டும் தற்போது நாம் வளர வேண்டும் என்பதை விட ஏற்கனவே வளர்ந்து விட்ட பா.ஜா.க மற்றும் மோடி என்னும் தீய சக்தியை ஒழிக்க ஒற்றுமையுடன் பாடுபடவேண்டும்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சி பொற்காலம் ஆட்சி என்று சொல்வதற்கு பதிலாக நவீனத்திற்கு ஏற்ப ஸ்டாலின் ஆட்சி காமராஜர் ஆட்சி என்று சொல்வேன்.

தமிழகத்தில் உள்ள இளைஞர்கள் படித்தவர்களாக இருப்பதற்கு காரணம் காமராஜர். அவர் மதிய உணவுத் திட்டத்தை

கொண்டு வந்தார்.

தற்போது எத்தனையோ நிதி நெருக்கடி இருக்கும் சூழலிலும் அனைத்து அரசு பள்ளிகளில் காலை உணவு திட்டம் கொண்டு வரப்பட்டது.

மதிய உணவு தந்த காமராஜருடன் காலை உணவு தந்த மிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை ஒப்பிடுவது என்ன தவறு. தமிழகத்தில் உள்ள தாய்மார்கள் மு.க.ஸ்டாலின் பின்னால் நிற்கிறார்கள்.

நான்கு முனை போட்டியில் வாக்குகள் சிதற தான் செய்யும். கடந்த தேர்தலில் மூன்று முனை போட்டி ஏற்பட்டது. நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலில் பா.ம.க, பாரிவேந்தர், ஏ.சி. சண்முகம் போன்றவர்களால் தான் பா.ஜ.க.வுக்கு வாக்கு சதவீதம் உயர்ந்துள்ளது.

தமிழிசை சவுந்தரராஜனை அமித்ஷா மேடையில் திட்டி எச்சரிக்கை செய்தது கண்டிக்கத்தக்கது. கட்சி பாகுபாடு இன்றி அவர் தமிழச்சியாக இருப்பதால் அதனை நான் கண்டிக்கிறேன்.

முஸ்லிம்கள் 25 சதவீதம் பேர் உள்ள நிலையில் ஒருவருக்கு கூட பா.ஜ.க சீட் கொடுக்கவில்லை. அப்படி இருக்கும் போது இந்தியாவுக்கு எப்படி பொதுவான அரசாக இருக்க முடியும். காங்கிரஸ் கட்சி நாடாளுமன்ற எதிர்கட்சி தலைவராக ராகுல்காந்தி வரவேண்டும்.

நீட் தேர்வு குளறுபடி காரணமாக தான் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆரம்பம் முதல் நீட் வேண்டாம் என்றார். தற்போது கேட்டால் காங்கிரஸ் தான் நீட் தேர்வு கொண்டு வந்தது என்பார்கள். காங்கிரஸ் நீட் தேர்வு கொண்டு வந்த போது மாநிலங்கள் விருப்பத்தின் பேரில் நடந்து கொள்ளலாம் என்று சொன்னது.

விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் எதிர்க்கட்சியினருக்கு டெபாசிட் கூட கிடைக்காது. காங்கிரஸ் கட்சி சார்பில் தலைவர் செல்வப்பெருந்தகையும், நானும் பிரச்சாரம் செய்வோம்.

இன்னும் மோடி தலைமையிலான ஆட்சி 5 மாதங்களில் கலைந்து விடும். இதற்கு பா.ஜ.க கூட்டணியில் உள்ள கட்சிகளே காரணமாக இருக்கும் என ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் செய்தியாளர்களிடம் கூறினார்.

வே.வெற்றிவேல் தலைமையில்!

மயிலை 125 அ வட்டத்தில் கலைஞர் 100 திருவிழா!

மயிலை த.வேலு - தமிழச்சி தங்கபாண்டியன் பங்கேற்பு

சென்னை, ஜூன், 17 -

சென்னை தென்மேற்கு மாவட்ட மயிலை கிழக்கு பகுதி 125 அ வட்ட கழகம் சார்பில் கலைஞர் 100 திருவிழா முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி வே. வெற்றிவேல் தலைமையிலும் எஸ். முரளி, நந்தனம் கி. மதி எம்.சி.,. அ. ரேவதி எம்.சி.. டி. தினகரன், என். இளங்கோவன், அமுல்ராஜ்,. முருகேசன், இரா.க.இளங்கோவன், தா. வின்சென்ட் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

மயிலை த. வேலு எம்.எல்.ஏ., தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்குகின்றனர்.

செல்வகுமார், டோமினிக், ரஞ்சிதம், L.R.சுரேஷ், மைக்கல், அகஸ்டின், தர்மபால், கார்த்திக் ,கமலநாதன் ஆகியோர் வரவேற்கின்றனர். A.விஷால் வினோத் சாமுவேல் கோடீஸ்வரன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

இந் நிகழ்ச்சில் மாவட்ட கழக நிர்வாகிகள் பகுதி நிர்வாகிகள் மற்றும் அணிகள் அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கறார்கள்

125 அ வட்ட கழக நிர்வாகிகள் சார்பில் அழைகிறோம்.

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் மேற்கு பகுதி 38 (அ) வட்டதில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 101வது பிறந்தநாளை முன்னிட்டு 38(அ) வட்ட செயலாளர் எஸ்.எல்.சுந்தர் ஏற்பாட்டில் மேற்கு பகுதி செயலாளர் எஸ். ஜெபதாஸ்பாண்டியன் தலைமையில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, ஆகியோர் 500 நபர்களுக்கு நலஉதவிகள் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் தமிழன் பிரசன்னா சிறப்புரை ஆற்றினார், மற்றும் மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன், பொன் இளவரசன் மாஸ்.டி.வெங்கடேசன், எம்.கோவிந்தசாமி, எம்.லோகநாதன், பி.சீனிவாசன், திராவிட செல்வி, எம்.வேதா, தேவா, வி.ராஜசேகர், எம்.விமலா, எஸ்.சொக்கலிங்கம், எஸ்.கிருஷ்ணன், ஜி.ராஜா, உசுரு, குறுவா, ஆர்.சுந்தர்ராஜன், மெடிக்கல் எ. ஆனந்தன், எ.வீரா, தாமு, வெல்டர் சிவா, அணில்குமார், எ.சிவா, கே.சி.ராஜா, உசுரு, எம்.ரசூல்மொய்தீன், ராஜா, கே.ஈஸ்வரி, அம்மு, சோபனா, ராஜேஸ்வரி, ஜோதி, ராஜி, ராஜேந்திரன், சுப்ரமணி, போஸ், கார்த்திக், கிருஷ்ணமூர்த்தி, ரூஸ்வெல்ட், புவனேஸ்வரி, ராஜேஸ்வரி, ராஜசேகர், ஜோதி, கரிமுளா, நாகூர், விஜய், யுவராஜ், மனோஜ், பி.குமார், கவின்குமார், ஹரி, நாதன், பாபு, எம்.பெருமாள், நாராயணன், நடராஜன், கிருஷ்ணமூர்த்தி, சுப்ரமணி, ஆர்.எஸ்.சி.போஸ், கார்த்திக், முருகன், முனியாண்டி, மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.